5. அரசினர் சட்டமுன்வடிவு

(அறிமுகம் செய்தல்.)

இந்திய முத்திரை (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்ட முன்வடிவு, அறிமுகம் செய்தல்.

1992 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு இந்திய முத்திரை தமிழ்நாட்டு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.